සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉන්දීය ඉතිහාසය II (I කොටස)
இந்திய வரலாறு II (பகுதி I)
History of India II (Part I)

25 A | T | II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை

சுட்டெண் : ....

அறிவுறுத்தல்கள் :

※ இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.

※ **பகுதி I** இல் **1 - 40** வரையான **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.

※ **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.

※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

பக்க இல.	வினா இல.	புள்ளிகள்
1	1 - 3	
2	4 - 15	
3	16 - 20	
4	21 - 25	
5	26 - 30	
6	31 - 40	
மொத்தம்		

	கையொப்பம்	குறியீட்டெண்
1 ஆம் பரீட்சகர்		
2 ஆம் பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
எண்கணிதப் பரிசோதகர்		
பிரதம பரீட்சகர்		

பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

1. (1) அண்ணாமலை (2) சத்புரா (3) நீலகிரி
(4) காரகோரம் (5) கிழக்கு காற்றாடி (......)

2. (1) பியஸ் (2) ராவி (3) செனாப்
(4) ஜீலம் (5) நர்மதா (......)

3. (1) சூரசேன (2) ஆந்திரா (3) குரு
(4) பாஞ்சால (5) மத்ஸய (......)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki

4. (1) மல்ல (2) விதேஹ (3) கோலிய
(4) அவந்தி (5) மௌரிய (……)

5. (1) பூர்ண கஸ்ஸப்ப (2) மக்கலிகோசல (3) ஸ்வேதாம்பர
(4) அஜித கேசகம்பல (5) சஞ்சய பெலத்திபுத்த (……)

6. (1) தக்சிலா (2) சம்பா (3) வாரணாசி
(4) மதுரா (5) பிரதிஸ்டான் (……)

7. (1) சபாஸ்கர் கல்வெட்டு (2) மான்சேரா கல்வெட்டு (3) கிர்னார் கல்வெட்டு
(4) தௌலி கல்வெட்டு (5) நாசிக் கல்வெட்டு (……)

8. (1) மேகதூதம் (2) மிருச்சகடிகம் (3) இரகுவம்சம்
(4) இருதுசம்காரம் (5) குமாரசம்பவம் (……)

9. (1) சிங்கவிஷ்ணு (2) மகேந்திரவர்மன் I (3) நந்திவர்மன்
(4) வரகுணவர்மன் (5) அபராஜிதவர்மன் (……)

10. (1) விஜயாலயன் (2) ஆதித்யன் (3) விக்கிரமாதித்யன்
(4) பராந்தகன் I (5) இராஜராஜன் I (……)

- 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) இந்திரன் - போருக்கு அதிபதியான கடவுள்
(2) இயமன் - மரணத்துக்கு அதிபதியான கடவுள்
(3) விஷ்ணு - அழிவுக்கு அதிபதியான கடவுள்
(4) அக்கினி - நெருப்புக்கு அதிபதியான கடவுள்
(5) குபேரன் - செல்வத்துக்கு அதிபதியான கடவுள் (……)

12. (1) அவந்தி - சண்டபச்சோத
(2) காசி - வத்ச கார
(3) அங்க - பிரம்ம தத்த
(4) வத்ச - உதயன
(5) கோசல - விதுடப (……)

13. (1) காளிதாசர் - மாளவிகாக்னிமித்திர
(2) விசாகதத்தர் - முத்ராரக்ஷய
(3) பாரவி - அமரகோச
(4) ஹர்ஷவர்தன - ரத்தினாவலி
(5) மகேந்திரவர்மன் I - மத்தவிலாசபிரஹசன (……)

14. (1) தமன - கோசல
(2) வியாக்கிரராஜ - மகாகாந்தாரா
(3) சுவாமிதத்த - கொட்டுற
(4) விஷ்ணுகோபி - காஞ்சி
(5) ஹஸ்திவர்மன் - வெங்கி (……)

15. (1) கனிஷ்க - உருத்திரதாமன்
(2) இராஜ்யவர்தன - சசங்க
(3) ஹர்ஷவர்தன - புலிகேசி II
(4) தர்மபால - வத்சராஜ
(5) பராந்தகன் I - கிருஸ்ண III (……)

[பக். 3 ஐப் பார்க்க

0257

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

16.

	X		Y
(i)	இந்திரப்பிரஸ்தம்	A	- நர்மதை
(ii)	பிரதிஸ்டான்	B	- சம்பால்
(iii)	உஜ்ஜேனி	C	- கோதாவரி
(iv)	பாருகச்சானா	D	- கங்கை
(v)	கனோஜ்	E	- யமுனா

(1) E A B C D (2) E A C B D (3) E C A B D (4) E C B A D (5) E C D A B (……)

17.

	X		Y
(i)	ஹெரடோடஸ்	A	- திபெத்தியன்
(ii)	பிளினி	B	- கிரேக்கன்
(iii)	அல்புருணி	C	- சீனன்
(iv)	பாஹியன்	D	- பாரசீகன்
(v)	தாராநாத	E	- உரோமன்

(1) A B D C E (2) B D E C A (3) B E A C D (4) B E D A C (5) B E D C A (……)

18.

	X		Y
(i)	அந்தபால	A	- திறைசேரிப் பொறுப்பாளர்
(ii)	அந்தர்வசிக	B	- பிரதான வரி வசூலிப்பாளர்
(iii)	சமாஹர்த	C	- அந்தப்புரப் பொறுப்பாளர்
(iv)	சந்திதாதா	D	- கோட்டைகளுக்குப் பொறுப்பானவர்
(v)	துர்கபால	E	- எல்லைகளுக்குப் பொறுப்பானவர்

(1) A D C B E (2) E A B D C (3) E C B A D (4) E D B C A (5) E C D A B (……)

19.

	X		Y
(i)	ஆதித்ய	A	- கிருஷ்ண I
(ii)	தந்திதுர்க	B	- கனிஷ்க
(iii)	துருவ	C	- பராந்தகன்
(iv)	வீமகட்பைசிஸ்	D	- குணால
(v)	அசோகன்	E	- கோவிந்த III

(1) A D C B E (2) A C E B D (3) C A D B E (4) C A E B D (5) C B E A D (……)

PAST PAPERS WIKI

20.

	X		Y
(i)	கங்கை கொண்ட சோழன்	A	- இராஜராஜன் I
(ii)	வாதாபி கொண்டான்	B	- நரசிங்கவர்மன்
(iii)	மும்முடிச் சோழன்	C	- புலேக்ஷின் II
(iv)	சகலஉத்தரப்பதநாத	D	- இராஜேந்திரன் I
(v)	பரமேஷ்வரன்	E	- ஹர்ஷவர்தனன்

(1) B A D E C (2) B D A E C (3) D A B E C (4) D B A E C (5) D E A C B (……)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

21. பிந்திய வேத காலம்

(1) இக்காலப்பகுதியில் கலாசார மையமாக குருஷேத்திரமும் மத்தியதேசமும் காணப்பட்டன.
(2) இருக்குவேத காலப் பகுதியில் நிலவிய கோத்திரங்களின் அடிப்படையிலான சமூக முறைமை பிந்திய வேதகாலத்திலும் அவ்வாறே வலிமைமிக்கதாக இருந்தது.
(3) சூத்திரர்கள் அசுத்தமான குழுவினராகக் கருதப்பட்டனர்.
(4) இந்த சமூகத்தில் வருண முறைமை நன்கு வேரூன்றி காணப்பட்டது.
(5) குருஷேத்திரம் மற்றும் மத்திய தேசத்தின் வளமான சமவெளிகள் இக்காலப்பகுதி மக்களின் உலகியல் வளங்களை அதிகரிக்கச் செய்தது. (......)

22. மகா அலெக்சாந்தர்

(1) மகா அலெக்சாந்தர் இந்தியாவினுள் நுழையும்போது மகதத்தின் ஆட்சியாளன் தனநந்த ஆவான்.
(2) தக்ஷிலா ஆட்சியாளனான அம்ஹி போர் வீரர்கள் அடங்கிய படையொன்றை வழங்கி மகா அலெக்சாந்தருக்கு உதவி புரிந்தான்.
(3) கிரேக்க படைவீரர்கள் மேலும் முன்னேறிச் செல்ல மறுத்ததினால் மகா அலெக்சாந்தருக்கு பியஸ் நதிக்கு அப்பால் செல்ல முடியாதிருந்தது.
(4) மகா அலெக்சாந்தரின் ஆக்கிரமிப்பு இந்தியாவின் மேலைத்தேய உலகுடனான நேரடி தொடர்புக்கு வழி ஏற்படுத்தியது.
(5) இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்கு முன் அலெக்சாந்தர் தன்னால் வெற்றிகொள்ளப்பட்ட இந்திய பிரதேசங்களின் ஆட்சியாளனாக செலியூகஸ் நிகேடரை நியமித்தான். (......)

23. ஹியுங் சாங்

(1) இந்தியாவுக்கு வந்த யாத்திரீகனான பிக்கு ஹியுங் சாங் பௌத்த சமய நூல்களை சமஸ்கிருத மொழியிலிருந்து சீனமொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தான்.
(2) ஹர்ஷவர்தன மன்னன் ஆட்சி காலத்தில் ஹியுங் சாங் இந்தியாவுக்கு வருகைதந்தான்.
(3) இராஜதந்திரிகள் மற்றும் மந்திரிமார்களினால் கனோஜ் இராச்சியத்தின் மகுடத்தைப் பொறுப்பேற்குமாறு ஹர்ஷவர்தனவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டதாக ஹியுங்சாங் குறிப்பிடுகிறார்.
(4) ஹர்ஷவர்தனவால் ஹியுங் சாங் அவரது ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.
(5) பிரயானகவில் தானம் வழங்கும் நிகழ்வின் பின்னர் ஹியுங் சாங் இந்தியாவை விட்டு வெளியேறினார். (......)

24. பாண்டியர்கள்

(1) பாண்டிய தேசம் பெண்களினால் ஆட்சி செய்யப்பட்டதென மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ளார்.
(2) காரவேலனின் கதிகும்பா கல்வெட்டில் அவன் பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(3) ஸ்ட்ரா போட்டவிற்கேற்ப பாண்டிய மன்னன் உரோம சக்கரவர்த்தியிடம் தூதுக் குழுவொன்றை அனுப்பியுள்ளான்.
(4) 1 ஆம் பராந்தகன் பாண்டியரின் ஆதிக்கப் பிரதேசங்களை ஆக்கிரமித்ததுடன் அந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக மதுரை கொண்டான் என்ற விருதுப் பெயரை பயன்படுத்தினான்.
(5) 1 ஆம் மகேந்திரவர்மன் பாண்டிய இராச்சியத்தின் கடைசி மன்னன் ஆவான். (......)

25. சாத்தவாகனர்

(1) புராணங்களில் சாத்தவாகனர்கள் ஆந்திரர்கள் என அழைக்கப்பட்டனர்.
(2) சாத்தவாகன இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளனான சிமுக கான்வயர்களின் பின்னர் அதிகாரத்தைப் பெற்றான்.
(3) தக்கணத்தின் முதலாவது அரச வம்சமான சாதவாகனர்கள், தக்ஷணத்தில் ஒரு பேரரசை நிறுவினர்.
(4) பிராமணீயத்தின் தீவிர ஆதரவாளர்களான சாத்தவாகனர் தமது இராச்சியத்தில் பௌத்த சமயத்தைப் பொறுத்துக் கொள்ளவில்லை.
(5) இந்து - உரோம வர்த்தகம் சாத்தவாகனர் காலத்தில் உச்சநிலை அடைந்தது. (......)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் .... **1** எனவும்
(A) யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் .... **2** எனவும்
(B) யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் .... **3** எனவும்
(C) யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் .... **4** எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .... **5** எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்				
1	2	3	4	5
(A) யும் **(B)** யும் மாத்திரம் சரி	**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி	**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி	**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி	**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி

26. **மகாபாரதம்** தொடர்பான பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இந்தியாவில் எழுந்த இரண்டு முக்கியமான காப்பியங்களில் ஒன்று மகாபாரதம் ஆகும்.
(B) மகாபாரதத்தினை எழுதியவர் வால்மீகி ஆவார்.
(C) கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான போர் பற்றிய தகவல்களை மகாபாரதம் விவரிக்கிறது.
(D) மகாபாரத யுத்தம் தக்கணப் பிரதேசத்தில் நிகழ்ந்தது. (......)

27. **ஹரப்பா நாகரிகம்** தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஹரப்பா நகரம் ராவி ஆற்றின் அருகில் அமைந்திருந்தது.
(B) ஹரப்பா சிதைவுகளிடையே அரசவம்ச கல்லறைகளோ மாளிகைகளோ கண்டுபிடிக்கப்படவில்லை.
(C) மொஹஞ்சதாரோ நகரின் சிதைவுகளிடையே பெரிய தானியக்களஞ்சியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
(D) சிந்துவெளி நாகரிகத்தின் மிகப்பெரிய நகரம் ஹரப்பா ஆகும். (......)

28. **மெகஸ்தனீஸ்** தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) சந்திரகுப்த மௌரியனின் அரசசபைக்கு செலியூகஸ் நிகேடரினால் அனுப்பப்பட்ட கிரேக்க தூதுவர் மெகஸ்தனீஸ் ஆவார்.
(B) மெகஸ்தனிஸ் பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்த காலம் நிச்சயமற்றிருப்பதால் இது தொடர்பில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.
(C) மெகஸ்தனீஸினால் எழுதப்பட்ட இந்திகா என்ற நூலின் மூலப்பிரதி அழிந்து போனாலும் பிற்பட்ட காலத்தில் கிரேக்க மற்றும் இலத்தீன் எழுத்தாளர்களினால் அந்த நூலின் பெயர்த்தெடுக்கப்பட்ட மேற்கோள்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.
(D) இந்தியாவைப் பற்றிய எழுத்துமூல தகவல்களை விட்டுச்சென்ற மேலைத்தேய உலகின் முதல் மனிதர் மெகஸ்தனீஸ் ஆவார். (......)

29. **சகர்கள்** தொடர்பான பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இந்தியாவில் சகர்களின் கீழிருந்த பிரதேசங்கள் சகஸ்தான் என அழைக்கப்பட்டன.
(B) ஆரம்ப சக ஆட்சியாளன் மௌஸ் என்பதோடு அவனின் தலைநகரம் தக்ஷிலா ஆகும்.
(C) சகர்களின் கீழே இருந்த பிரதேசங்கள் சத்திரபஸ்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
(D) வடமேற்கு இந்தியாவில் சகர்களின் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் இந்து-கிரேக்கர்கள் ஆவர். (......)

30. **பல்லவர்** தொடர்பான பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) சோழ சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் பல்லவர்கள் தென்னிந்தியாவில் அதிகாரத்துக்கு வந்தனர்.
(B) கிருஷ்ணா நதியிலிருந்து இந்தியாவின் தெற்கு எல்லை வரை பரந்த சாம்ராச்சியத்தைத் தாபிப்பதில் பல்லவர்கள் வெற்றிகண்டனர்.
(C) கலைநுட்பத்திறன்மிக்க இந்து ஆலயங்களை அமைக்கும் கலையானது முதலாம் மகேந்திரவர்மனால் தென் இந்தியாவுக்கு அறிமுகஞ் செய்யப்பட்டது.
(D) மகாபலிபுரம் நகர் முதலாம் நரசிம்மவர்மன் மன்னனால் அமைக்கப்பட்டது. (......)

[பக். 6 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

31. சங்க இலக்கியங்கள் எந்த ஆட்சியாளர்களின் ஆதரவினால் வளம் பெற்றன?
(1) சோழர் (2) பாண்டியர் (3) பல்லவர்
(4) சாளுக்கியர் (5) இராஷ்டிரகூடர் (......)

32. தென் இந்தியாவுக்கு ஆரிய கலாசாரத்தை அறிமுகப்படுத்திய முனிவராக கருதப்படுபவர்
(1) விசுவாமித்திரர் (2) வசுபந்து (3) பரதர்
(4) அகத்தியர் (5) வால்மீகி (......)

33. பின்வரும் நகரங்களில் லிச்சவி குடியரசின் தலைநகரம் எது?
(1) குசிநாரா (2) சாகேத (3) மிதிலா
(4) மதுரை (5) வைசாலி (......)

34. சுதர்சன ஏரி எந்த மௌரிய ஆட்சியாளரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது?
(1) சந்திரகுப்தமௌரியன் (2) பிந்துசாரன் (3) அசோகன்
(4) தசரதன் (5) குணாளன் (......)

35. நான்காவது பௌத்த மகாநாட்டின் பின்னர் மகாயான நூல் எந்த மொழியில் எழுதப்பட்டது?
(1) பாளி (2) பிராகிருதம் (3) சமஸ்கிருதம்
(4) திபெத் (5) சீனம் (......)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
1	சரியானது	பிழையானது
2	சரியானது	சரியானது
3	பிழையானது	பிழையானது
4	பிழையானது	சரியானது
5	சரியானது	சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று	
36.	சிரியாவின் சக்கரவர்த்தி டைமகோஸ் என்ற பெயருடைய அரச தூதுவரை பிந்துசாரனுடைய அரச சபைக்கு அனுப்பி வைத்தான்.	டைமகோஸினால் பாடலிபுத்திரத்தின் மாநகர ஆட்சி பற்றி விவரமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.	(......)
37.	காரவேலனின் மரணத்தின் பின்னர் அசோக மன்னன் கலிங்கத்தை வெற்றி கொண்டான்.	காரவேலனின் சாதனைகள் பற்றிய தகவல்கள் கதிகும்பா கல்வெட்டில் காணப்படுகின்றன.	(......)
38.	எல்லோராக் குகைகளில் உள்ள கலையாக்கங்கள் பௌத்தம் சமணம் மற்றும் இந்து சமயங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.	மகாராஷ்டிரத்தின் எல்லோராவில் கற்களாலான குகைகள் 30 இற்கும் அதிகளவில் காணக்கூடியதாயுள்ளது.	(......)
39.	ஹர்ஷவர்தன மரணமடைந்தவுடன் யசோவர்மன் கனோஜின் அதிகாரத்துக்கு வந்தான்.	முதலாம் நாகபட்ட என்ற பெயருடைய பிரதிஹார மன்னனால் யசோவர்மன் தோற்கடிக்கப்பட்டான்.	(......)
40.	தோரமான மேற்கு இந்தியாவின் பிரதேசங்களைக் கைப்பற்றி இந்தியாவில் ஹூணர்களின் ஆதிக்கத்தைத் தாபித்தான்.	தோரமானாவின் பின்னர் அவரின் மகன் மிஹிரகுல ஆதிக்கத்துக்கு வந்ததுடன் முதலாம் மஹேந்திரபாலவினுடைய தலைமையிலான ஒன்றிணைந்த படையணியினால் அவன் தோற்கடிக்கப்பட்டான்.	(......)

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉන්දීය ඉතිහාසය II
இந்திய வரலாறு II
History of India II
25 A T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉන්දීය ඉතිහාසය II (II කොටස)
இந்திய வரலாறு II (பகுதி II)
History of India II (Part II)

25 A | T | II

இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை

அறிவுறுத்தல்கள் :

- ※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ※ பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- ※ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- ※ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.
  (**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம் பகுதி I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

பகுதி A

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேசப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) போலான் கணவாய்	(ii) சத்புரா மலைத்தொடர்	(iii) பியஸ் நதி
(iv) இந்திரப் பிரஸ்தம்	(v) கங்கை கொண்ட சோழபுரம்	(vi) கிழக்கு காற்றாடி
(vii) துங்கபத்திரா நதி	(viii) கிர்நார்	(ix) சாஞ்சி
(x) தாமரலிப்தி	(xi) மகாநதி ஆறு	(xii) பிரதிஸ்டான்

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

பகுதி B

2. சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம் மற்றும் வீழ்ச்சி பற்றிப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

3. (i) பாடலிபுத்திரத்தை மகதத்தின் தலைநகராக்கிய முதலாவது அரசன் யார்? (01 புள்ளி)

(ii) அசோகன் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் மகதத்தை ஆட்சிசெய்த **இரண்டு** அரசவம்சங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) பிம்பிசார மன்னனின் கீழ் மகதம் இருந்த காலத்தில் வட இந்தியாவில் நிலவிய **மூன்று** இராச்சியங்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iv) கி.மு. 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் அசோகன் மன்னனாகும் வரையுள்ள காலத்தில் மகதத்தின் அரசியல் வளர்ச்சியை விளக்குக. (10 புள்ளிகள்)

4. மௌரிய சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்த காலத்திலிருந்து குப்தரின் ஆதிக்கும் தொடங்கும் வரை வடமேற்கு இந்தியாவில் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் அரசியல் நடவடிக்கைகளை சுருக்கமாக விவரிக்குக. (16 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 8 ஐப் பார்க்க

Past Papers Wiki
අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

5. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வடமேற்கு எல்லைகள்

(ii) பதினாறு மகாஜன பதங்கள்

(iii) செலியூகஸ் நிகேடர்

(iv) இருக்கு வேத காலத்தில் சமயநிலை

(08 × 2 = 16 புள்ளிகள்)

பகுதி C

6. "குப்த அரசர்களிடையே சமுத்திரகுப்தன் அவனது பெருமளவு போருக்க இயல்பு காரணமாக தனித்துவமான ஆட்சியாளன் ஆவான்."

(i) சமுத்திரகுப்தனுக்கு முன்னிருந்தவரின் பெயர் தருக. (01 புள்ளி)

(ii) சமுத்திரகுப்தனின் போர் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் வழங்கும் தூண்கல்வெட்டின் பெயர் தருக. (01 புள்ளி)

(iii) சமுத்திரகுப்தனால் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆரியவர்த்த இராச்சியங்கள் இரண்டினது அரசர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) சமுத்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்டு மீண்டும் அதிகாரத்தைப் பெற்ற தக்ஷிண பதத்தின் **இரண்டு** அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) "சமுத்திர குப்தன் உண்மையில் போர் நாட்டமுள்ளவன்" இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? காரணங்கள் தருக. (10 புள்ளிகள்)

7. ஹர்ஷவர்தனவின் பின்னர் கனோஜின் மேலாதிக்கத்திற்காக ஏற்பட்ட போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகளைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

8. சோழரின் ஆதிக்கப்பரம்பலைப் பின்வரும் கருப்பொருள்களின் கீழ் பரிசீலிக்குக.

(i) இந்தியாவினுள் பரவுதல் (10 புள்ளிகள்)

(ii) இந்தியாவுக்கு வெளியே பரவுதல் (06 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) குஷாணரின் கீழ் பௌத்த சமயம்

(ii) நாலந்த பல்கலைக்கழகம்

(iii) பல்லவர்கலைகளும் கட்டிடக்கலைநுட்பமும்

(iv) தர்மபால மன்னன்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library